www.lkdu.lk

"புலமை வழிகாட்டி"

2021இல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக


ZOOM ஊடாக நடாத்தப்படும் வழிகாட்டல் வகுப்பு

செயலட்டை - 25

வழிகாட்டல் : ஆசிரியர் எம்.ஆர்.எம்.ரனீஸ்
0713320333, 0777557434


சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) தரப்பட்டுள்ள உருக்களில் வேறுபட்ட உருவின் கீழ் கோடிடுக.



1) 2) 3)

2) தரப்பட்டுள்ள உருக்களுக்கிடையிலான தொடர்புகளை அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க



1) 2) 3)

3) மாணவன் ஒருவன் விளையாட்டுப் போட்டியில் முதலாவது சுற்றில் ஈட்டியை எறிந்த போது அது 15m தூரத்தில் விழுந்தது. மேலும் அவன் இரண்டாவது சுற்றில் ஈட்டியை எறிந்தால் அது சென்றடையக் கூடிய தூரம் பற்றிக் கூறக்கூடியது.

1) 15m இற்கு அதிகமாக இருக்கும் 2) 15m இற்கு சமமாக இருக்கும்
3) அது பற்றி சரியாக கூற முடியாது.

4) 1 தொடக்கம் 90 வரையான எண்ணும் எண்களை எழுதும் போது 8 எழுதப்படும் எண்களில் 8ஆல் மிகுதியின்றி வகுப்படும் எண்கள் எத்தனை உள்ளன?

1) 6 2) 5 3) 4

5) நான்கு புதன்கிழமைகள் வருகின்ற ஏப்ரல் மாதமொன்றின் புதன்கிழமைகளின் திகதிகளின் கூட்டுத் தொகைக்கு இருக்கத்தக்க குறைந்தபட்ச கூட்டுத்தொகை யாது?

1) 62 2) 66 3) 58

6) ஒரு போட்டியில் கலந்துகொண்ட 6 பேர் கொண்ட கரப்பந்தாட்ட அணியொன்றிலுள்ள வீரர்கள் ஒவ்வொருவரும் தமது அணி வீரர்களுடனும் எதிர் அணியைச் சேர்ந்த வீரர்களுடனும் கைகுழுக்கிக் கொண்டனர் எனின் அங்கு இடம்பெற்ற மொத்த கைகுழுக்கள் எத்தனை?

1) 66 2) 132 3) 144

7) தொட்டியொன்றின் கொள்ளளவு 45 லீற்றர் ஆகும். அத்தொட்டியினுள் அக்கா 8 லீற்றர் நீரை ஊற்றும் போது தங்கை 5 லீற்றர் நீரை வெளியே எடுப்பாள் எனின் எத்தனையாவது தடவை அக்கா ஊற்றும் போது தொட்டி முதற் தடவையாக நிரம்பும்?

1) 13வது தடவை 2) 14வது தடவை 3) 12வது தடவை

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium


தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

8) அருகிலுள்ள உருவை சதுரமுகியாக பூரணப்படுத்துவதற்கு எத்தனை குறைந்தது எத்தனை சிறிய சதுரமுகிகள் தேவை?



1) 15
2) 16
3) 13

9) ஒரு மண்டபத்தில் கதிரைகள் 6 நிறைகளாவும் 6 நிரல்களாகவும் அடுக்கப்பட்டிருந்தன. அருகருகேயும் முன்னும் பின்னும் அமராதவாறு உயர்ந்தபட்சம் அமரவைக்க கூடியவர்களின் எண்ணிக்கை யாது?

1) 36 2) 18 3) 30


10) ஒரே இலக்கம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இருக்கத்தக்கதாக 20 அட்டைகளில் ஓர் இலக்கம் வீதம் எழுதப்பட்டுள்ளது. 10 அட்டைகளில் இருக்கும் இலக்கங்களின் ஆகவும் கூடிய கூட்டுத்தொகை 12 ஆகும். எஞ்சியுள்ள 10 அட்டைகளில் இருக்கும் இலக்கங்களின் கூட்டுத்தொகைக்கு இருக்கத்தக்க ஆகவும் கூடிய பெறுமானம் யாது?

1) 80 2) 90 3) 100

11) ஒரே இலக்கம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இருக்கத்தக்கதாக 20 அட்டைகளில் ஓர் இலக்கம் வீதம் எழுதப்பட்டுள்ளது. 10 அட்டைகளில் இருக்கும் இலக்கங்களின் ஆகவும் கூடிய கூட்டுத்தொகை 25 ஆகும். எஞ்சியுள்ள 10 அட்டைகளில் இருக்கும் இலக்கங்களின் கூட்டுத்தொகைக்கு இருக்கத்தக்க ஆகவும் குறைந்த பெறுமானம் யாது?

1) 20 2) 30 3) 40

12) உருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1) 25
2) 26
3) 27

13) ஒரு வரிசையில் இரண்டு வெள்ளை நிறக் கொடிகளுக்கிடையில் நான்கு ஊதா நிறக் கொடிகள் என்ற ஒழுங்கில் மொத்தமாக 87 கொடிகள் தொங்கவிடப்பட்டடிருந்தன எனின் அங்குள்ள வெள்ளை நிறக் கொடிகளின் எண்ணிக்கை யாது?

1) 16 2) 14 3) 18

14) ஒரு வரிசையில் இரண்டு பச்சை நிறக் கொடிகளுக்கிடையில் மூன்று சிவப்பு நிறக் கொடிகள் என்ற ஒழுங்கில் மொத்தமாக 58 கொடிகள் தொங்கவிடப்பட்டடிருந்தன எனின் அங்குள்ள சிவப்பு நிறக் கொடிகளின் எண்ணிக்கை யாது?

1) 42 2) 43 3) 44


15) எனது வயது 11 ஆகும். எனது அண்ணணின் வயது எனது வயதிலும் பார்க்க 8 வருடங்கள் கூடியதாகும். எனது அம்மாவின் வயது அண்ணனின் வயதின் இரு மடங்கிலும் 3 கூடியதாகும் எனின் அம்மாவின் வயது யாது?

1) 38 2) 41 3) 24

16) ஓட்டப் போட்டியொன்றில் நிமல் போட்டியை 8 நிமிடத்திலும், குமார் 5 நிமிடத்திலும், விமல் 10 நிமிடத்திலும் போட்டியை நிறைவு செய்தனர் எனின் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டவர் யார்?


1) விமல் 2) நிமல் 3) குமார்

17) 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்ட தாயக்கட்டை ஒன்றை மூன்று தடவைகள் சுண்டிய போது விழுந்த விதத்தை கீழுள்ள படங்கள் காட்டுகின்றன. அதன்படி இலக்கம் 6இற்கு எதிர்பக்கத்தில் உள்ள இலக்கம் யாது?




1) 1 2) 2 3) 4

18) கீழே தரப்பட்டுள்ள A உருவிலிருந்து B உருவைப் போல் எத்தனை துண்டுகள் வெட்டலாம்?



1) 20
2) 24
3) 30

19) இங்கு தரப்பட்டுள்ள இரு உருக்களிலும் நிழற்ப்பட்டுள்ள சதுரங்கள் ஒன்றன் மீது ஒன்று அமையக் கூடிய வகையில் வைக்கப்பட்டதன் பின்னர் காணக்கூடியதாக அமையும் சதுரங்களின் எண்ணிக்கை,



1) 12
2) 10
3) 9

விலைப்பட்டியலை அவதானித்து அடுத்துள்ள இரு வினாக்களுக்கும் விடை தருக.

தேயிலை 200g + சீனி 1kg = ரூ. 170.00 **சீனி 500g + கிழங்கு 1kg = ரூ. 235.00**

கிழங்கு 500g = ரூ. 100.00

20) கிழங்கு 3kg, சீனி 1kg ஆகியவற்றை வாங்குவதற்குத் தேவையான பணம் யாது?

1) ரூபாய் 470.00 2) ரூபாய் 670.00 3) ரூபாய் 570.00

21) தேயிலை 1kg விலை யாது?

1) ரூபாய் 200.00 2) ரூபாய் 100.00 3) ரூபாய் 500.00

22) சமனின் நிறை நிமலின் நிறையின் இரு மடங்காகும். நிமலின் நிறை குமாரின் நிறையின் அரைவாசியாகும். மூவரினதும் நிறை 175 kg எனின் சமனின் நிறை யாது?

1) 35 kg 2) 70 kg 3) 65 kg

23) ஒரு கட்டிடத்தை 6 மனிதர்கள் 4 நாட்களில் செய்து கட்டிமுடிப்பார்களாயின் அக்கட்டடத்தை 2 மனிதர்கள் எத்தனை நாட்களில் கட்டி முடிப்பர்கள்?

1) 3 2) 12 3) 24

24) ஒரு இரும்புக் கம்பியினை 15 துண்டுகளாக வெட்ட வேண்டும். ஒரு தடவை வெட்டுவதற்கு ரூபாய் 15.00 கூலியாக கொடுக்க வேண்டுமாயின் வெட்டிய துண்டுகளுக்கு எவ்வளவு கூலி கொடுக்கப்பட வேண்டும்?

1) ரூ. 225.00 2) ரூ. 210.00 3) ரூபாய் 240.00

25) "இருபதாயிரத்து ஐந்நூற்று ஐந்து" என்னும் எண்ணில் உள்ள இலக்கங்களைப் பின்னாலிருந்து முன்னால் எழுதும் போது கிடைக்கும் எண் யாது?

1) 20505 2) 50502 3) 50250

செய்கை வேலைக்காக

எம்.ஆர்.எம்.ரனீஸ் ஆசிரியரினால் Zoom மூலமாக நடாத்தப்படும் புலமைப்பரிசில் வகுப்பில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள்
071 3320333, 077 7557434 என்ற இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

2021 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான வகுப்புக்கள்:
குழு 01 – செவ்வாய்க் கிழமை இரவு 06.45 – 08.15 வரை
குழு 02 – புதன் கிழமை இரவு 06.45 – 08.15 வரை

2022 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான வகுப்புக்கள்:
வியாழக் கிழமை இரவு 06.45 – 08.15 வரை

www.lkdu.lk

"புலமை வழிகாட்டி"

2021இல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக

ZOOM ஊடாக நடாத்தப்படும் வழிகாட்டல் வகுப்பு

செயலட்டை - 27

வழிகாட்டல் : ஆசிரியர் எம்.ஆர்.எம்.ரனீஸ்
0713320333, 0777557434

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) கடிகாரம் மணித்தியாலத்தில் நேரத்தைக் காட்டும் போது மணித்தியாலமுள்ளுக்கும் நிமிடமுள்ளுக்கும் இடையிலான கோணம் செங்கோணமாக அமையும் எத்தனை சந்தர்ப்பங்கள் ஒரு நாளில் உள்ளன?

1) 2 2) 4 3) 6


2) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த ஆண்டு தொடர்பான கூற்று,

1) 15ஆம் நூற்றாண்டு 1 தசாப்தம் 2) 16ஆம் நூற்றாண்டு 1 தசாப்தம்
3) 15ஆம் நூற்றாண்டு 2 தசாப்தம்

3) நீள, அகல, உயரம் 8cm ஆகவுள்ள சதுரமுகிக் குற்றி ஒன்றிலிருந்து நீள, அகல, உயரம் 2cm ஆகவுள்ள எத்தனை சதுரமுகிக் குற்றிகளை வெட்டலாம்?

1) 16 2) 12 3) 64

4) தரப்பட்டுள்ள தரவிற்கு அமைய உருவின் பெறுமதி யாது?



1) 90 இற்கு குறைவாகும் 2) 90 இற்கு சமனாகும்
3) 90 இற்கு அதிகமாகும்

5) கமலாவிடம் 32 சிறிய சதுரமுகிகள் உள்ளன. அவள் அச்சதுரமுகிகள் சிலவற்றை ஒன்றுடன் ஒன்று ஒட்டி பெரிய சதுரமுகி ஒன்றை அமைத்ததன் பின்னர் அவளிடம் மீதியாகவுள்ள சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?

1) 4 2) 5 3) 6

6) கீதாவிடம் 25 சிறிய சதுரமுகிகள் உள்ளன. அவள் அச்சதுரமுகிகள் சிலவற்றை ஒன்றுடன் ஒன்று ஒட்டி இரண்டு பெரிய சதுரமுகிகளை அமைத்ததன் பின்னர் அவளிடம் மீதியாகவுள்ள சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?

1) 8 2) 9 3) 2

பின்வரும் அட்டவணையை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

	முதலாம் நிரல்	இரண்டாம் நிரல்	மூன்றாம் நிரல்
முதலாம் நிறை	**1**	**2**	**3**
இரண்டாம நிறை	**4**	**5**	**6**
மூன்றாம் நிறை	**7**	**8**	**9**

கீழேயுள்ள படிமுறை 1இலும் 2இலும் குறிப்பிட்டுள்ளவாறு அட்டவணை மாற்றப்படுகின்றது. அதனைப் பயன்படுத்தி அடுத்துள்ள இரு வினாக்களுக்கும் விடை தருக.

படிமுறை 1 - மூன்றாம் நிரை இருக்கும் இடத்திற்கு இரண்டாம் நிரையையும் இரண்டாம் நிரை இருந்த இடத்திற்கு மூன்றாம் நிறையையும் மாற்றல்.

படிமுறை 2 – முதலாம் நிரல் இருக்கும் இடத்திற்கு இரண்டாம் நிரலையும் இரண்டாம் நிரல் இருந்த இடத்திற்கு முதலாம் நிரலையும் மாற்றல்.

www.tkdu.lk

7) மாற்றங்களைச் செய்ததன் பின்னர் அட்டவணையின் நடு அடைப்பில் இருக்கும் இலக்கம் யாது?

1) **5** 2) **6** 3) **7**

8) ஆரம்பத்தில் இருந்த அட்டவணையில் இலக்கம் **7** இருந்த இடத்திற்கு மாற்றங்களைச் செய்த பின்னர் வரும் இலக்கம் யாது?

1) **4** 2) **5** 3) **8**

9) 1 தொடக்கம் 25 வரையுள்ள ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது?

1) 156 2) 169 3) 176

10) 1 தொடக்கம் 29 வரையுள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை யாது?

1) 196 2) 225 3) 210

11) 16 படிகள் கொண்ட படிக்கட்டில் கீதா முதல் படியிலும் விமல் 16ஆம் படியிலும் நிற்கின்றனர். கீதா மூன்று படிகள் ஏறும் போது விமல் இரு படிகள் இறங்கினால், அவர்கள் இருவரும் எத்தனையாவது படியில் சந்திப்பர்?

1) 9 2) 10 3) 11

12) வாகன தரிப்பிடமொன்றில் உள்ள மோட்டார் சைக்கிள்களினதும் முச்சக்கர வண்டிகளினதும் எண்ணிக்கை 15ஆகும். அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 35 ஆகுமெனின் அங்குள்ள மோட்டார் சைக்கிள்கள் எத்தனை யாது?

1) 10 2) 5 3) 8

13) 75 என்ற எண்ணை விட பெரிய எண்ணையும் 75 என்ற எண்ணை விட சிறிய எண்ணையும் கூட்டி இரண்டால் வகுத்தால் வரும் விடை 75ஆகும். எனின் அவ்விரு எண்களும் எவை?

1) 77, 74 2) 73, 76 3) 74, 76

14) சதுனியின் தாயாரின் தாய் எனது தந்தையினதும் தாய் ஆவார் எனின் சதுனியின் தாய் எனக்கு என்ன உறவு முறையாகும்?

1) பாட்டி 2) சகோதரி 3) மாமி

கிரிக்கெட் போட்டியொன்றில் 3 வீரர்கள் பெற்றுக் கொண்ட ஓட்டங்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

சிறில் மற்றும் நுவன் பெற்றுக் கொண்ட மொத்த ஓட்ட எண்ணிக்கை 78.


நுவன் மற்றும் அமல் பெற்றுக் கொண்ட மொத்த ஓட்ட எண்ணிக்கை 53.

நுவன், அமல் மற்றும் சிறில் ஆகிய மூவரும் பெற்றுக் கொண்ட மொத்த ஓட்ட எண்ணிக்கை 129.

15) சிறில் பெற்றுக் கொண்ட ஓட்டங்களின் எண்ணிக்கை யாது?

1) 12 2) 51 3) 76

16) தரப்பட்டுள்ள உருவில் பற்சில்லு A சுழலும் திசையின்படி, வாளி செல்வது,



1) மேல் நோக்கியாகும்
2) கீழ் நோக்கியாகும்
3) கூறமுடியாது

17) வரிசையொன்றிலுள்ள 27 பிள்ளைகளுக்கு ஒரு தடவைக்கு ஒரு பழம் வீதம் அப்பிள் பழங்களும் தோடம்பழங்களும் வரிசையாக வழங்கப்படுகின்றது. அங்கு 15 அப்பிள்களும் 25 தோடம்பழங்களும் வழங்கப்பட்டதெனின் அப்பிள் மற்றும் தோடம் பழம் ஆகிய இருவகையும் கிடைக்கப்பெற்ற எத்தனைப் பிள்ளைகள் உள்ளன?

1) 15 2) 27 3) 13

18) மாட்டு வண்டிச் சில்லொன்று இரு தடவைகள் முழுமையாக சுழலும் போது 10மீற்றர் தூரம் பயணிக்கும். இச்சில்லு 100 தடவைகள் சுழலம் பயணிக்கும் தூரம் யாது?


1) 50 மீற்றர் 2) 100 மீற்றர் 3) 500 மீற்றர்

19) கீதாவிடம் உள்ள முத்திரைகளின் எண்ணிக்கையின் அரைவாசியைவிட 40 குறைவாக ராணியிடம் உள்ளது. ராணியிடம் உள்ள முத்திரைகளை விட 20 அதிகமாக சீதாவிடம் உள்ளது. சீதாவிடம் உள்ள முத்திரைகளின் எண்ணிக்கை 100 எனின் மூவரிடமும் உள்ள முத்திரைகளின் எண்ணிக்கை யாது?


1) 440 2) 420 3) 400

20) இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1) 6 2) 9 3) 8



21) வட்டவடிவ கடதாசி உருவில் காட்டப்பட்டுள்ளவாறு புள்ளிகளின் வழியே இரு தடவைகள் மடிக்கப்பட்டு நிழற்றப்பட்ட பகுதி வெட்டி நீக்கப்பட்டதன் பின்னர் விரிக்கபட்டால் அக்கடதாசியில் தோன்றும் துளைகளின் எண்ணிக்கை யாது?



1) 8 2) 9 3) 12

22) மணியொன்று 2 நிமிடங்களுக்கு ஒரு முறையும் மற்றொரு மணியொன்று 3 நிமிடங்களுக்கு ஒரு முறையும் ஒலிக்கும். இரண்டு மணிகளும் ஒன்றாக காலை 11.00 மணிக்கு ஒலித்தது. அதன்படி மீண்டும் இரண்டு மணிகளும் ஒன்றாக எத்தனை மணிக்கு ஒலிக்கும்?

1) காலை 11.05 மணிக்கு 2) காலை 11.06 மணிக்கு
3) காலை 11.15 மணிக்கு

23) 2021 ஜனவரி மாதம் 1 ஆம் திகதி வியாழக்கிழமை எனின் அவ்வருடத்தின் 174 ஆம் நாள் என்ன கிழமையாகும்?

1) வியாழன் 2) செவ்வாய் 3) புதன்

24) 2021ஆம் ஆண்டின் மே 15 செவ்வாய்க்கிழமை எனின் அவ்வாண்டின் செப்டம்பர் 15ஆம் திகதி என்ன நாளாகும்?

1) திங்கட்கிழமை 2) செவ்வாய்க்கிழமை 3) ஞாயிற்றுக்கிழமை

25) ஒரு சங்கத்தில் பத்து உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாதமும் ஒரு தடவை உறுப்பினர்களின் பெயர் பட்டியலின் ஒழுங்கு முறைக்கேற்ப ஒவ்வோர் உறுப்பினரினதும் வீட்டில் சங்கத்தின் கூட்டம் நடைபெறுகின்றது. முதலாம் உறுப்பினரின் வீட்டில் கூட்டம் பெப்ரவரி மாதத்தில் நடைபெற்றது. அவருடைய வீட்டில் அடுத்ததாக கூட்டம் எம்மாதத்தில் நடைபெறும்?

1) ஒக்டோபர் 2) நவம்பர் 3) டிசம்பர்

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkdu.lk

செய்கை வேலைக்காக

Ranees

MRM.Ranees

எம்.ஆர்.எம்.ரனீஸ் ஆசிரியரினால் Zoom மூலமாக நடாத்தப்படும் புலமைப்பரிசில் வகுப்பில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள்
071 3320333, 077 7557434 என்ற இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

2021 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான வகுப்புக்கள் (றமழான் காலத்தில் மாத்திரம்)
குழு 01 – சனிக்கிழமை காலை 11.00 – 12.45வரை
குழு 02 – சனிக்கிழமை மாலை 03.30 – 05.15 வரை

2022 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான வகுப்புக்கள் (றமழான் காலத்தில் மாத்திரம்)
ஞாயிற்றுக்கிழமை மாலை 03.30 – 05.00 வரை

www.lkdu.lk

"புலமை வழிகாட்டி"

2021இல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக ZOOM ஊடாக நடாத்தப்படும் வழிகாட்டல் வகுப்பு

செயலட்டை - 28

வழிகாட்டல் : ஆசிரியர் எம்.ஆர்.எம்.ரனீஸ்
0713320333, 0777557434

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) "நாற்பதாயிரத்து இருநூற்று ஐம்பத்தேழு" என்பதை இலக்கங்களில் எழுதுக.

.....

2) 10இற்கும் 20இற்கும் இடைப்பட்ட மிகப்பெரிய ஒற்றை எண்ணையும் மிகச்சிறிய ஒற்றை எண்ணையும் உரோமன் எண்குறியில் முறையே எழுதுக. .....

3) "முப்பதாயிரத்து அறுநூற்று எழுபது" என்னும் எண்ணுடன் முப்பதைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக. .....

4) ஒரு பெட்டியில் 8 சவர்க்கார கட்டிகள் வீதம் 7 பெட்டிகளும், 6 சவர்க்கார கட்டிகள் வீதம் 3 பெட்டிகளும் உள்ளன எனின் அப்பெட்டியிலுள்ள சவர்க்கார கட்டிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

5) பெரிய பெட்டியொன்றில் 12 சிறிய பெட்டிகளை அடுக்கமுடியும். ஒரு சிறிய பெட்டியில் 12 அப்பியாசக் கொப்பிகள் அடுக்க முடியுமெனின் அவ்வாறான 4 பெரிய பெட்டிகளில் எத்தனை அப்பியாசக் கொப்பிகளை அடுக்க முடியும்? .....

6) காலை 09.30மணிக்கு வீட்டிலிருந்து வங்கிக்குச் சென்ற தயானி ந.ப 12.00 மணிக்கு மீண்டும் வீட்டைவந்தடைந்தாள். அவள் வங்கியில் 30 நிமிடங்கள் தரித்திருந்தாள். அவளது வீட்டிலிருந்து வங்கிக்குள்ள தூரம் 8 கிலோமீற்றர் எனின் அவள் ஒரு மணித்தியாலயத்தில் பயணம் செய்த தூரம் யாது? .....

7) ஒரு மோட்டர்வாகனம் சென்ற தூரம் மானியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

0	7	9	9	7	km

இம்மோட்டார் வாகனம் 3km தூரம் சென்ற பின்னர் மானியில் காணப்பட்ட இலக்கங்களை வெற்று அடைப்புக்களில் எழுதுக.

					km

8) அருகிலுள்ள அட்டவணையைக் கருத்திற்கொண்டு கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

	காலி	கண்டி	யாழ்ப்பாணம்
கொழும்பு	115	230	509
காலி		115	394
கண்டி			318

km

அ) யாழ்ப்பாணத்துக்கும் காலிக்கும் இடையே உள்ள தூரம் யாது?

.....

ஆ) யாழ்பாணத்திலிருந்து கண்டி ஊடாக காலிக்குச் செல்லும் ஒருவர் செல்ல வேண்டிய மொத்த தூரம் யாது? .....

இ) மிகக் கூடிய தூரம் எந்நகரங்களுக்கிடையிலுள்ளது. .....


9) மணித்தியாலத்திற்கு 50கிலோ மீற்றர் எனும் மாறா வேகத்தில் பயணிக்கும் மோட்டார் கார் ஒன்று காலை 8.30 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு காலை 11.00மணிக்கு காலியை சென்றடைந்தது எனின் கொழும்பிலிருந்து காலிக்குள்ள தூரம் யாது? .....

10) பி.ப 5.20 புறப்படவிருந்த புகையிரதம் 25 நிமிடங்கள் தாமதித்து தனது பயணத்தை ஆரம்பித்தது. அப்பயணத்திற்கு 2 மணித்தியாலம் 25 நிமிடங்கள் எடுத்தது எனின் குறித்த புகையிரதம் பயணத்தை நிறைவு செய்யும் நேரத்தை நியம நேரமாக குறிப்பிடுக? .....

11) காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிய பரிசளிப்பு பிற்பகல் 2.30 மணி வரை நடைபெற்றதெனின் பரிசளிப்பு விழா எத்தனை மணித்தியாலங்கள் நடைபெற்றது? .....

12) கீதா கருத்தரங்கிற்கு 8.37இற்கு சமூகமளித்திருந்தான். கருத்தரங்கு 9.00மணிக்கு ஆரம்பிப்பதாக இருந்தால் கீதா எவ்வளவு நேரம் முன்னதாக சமூகமளித்திருந்தாள்?

13) வட்டத்தினுள் தரப்பட்டுள்ள எண்களில் 2, 3, 4, 5 மற்றும் 6 எனும் எண்களால் மீதியின்றி வகுபடும் எண் யாது? .....



14) தேங்காயொன்றின் விலை 85.00ஆகும். சீதாவிடம் 595.00 உள்ளது. அதன்படி, அவள் 9 தேங்காய்கள் வாங்குவதற்கு இன்னும் தேவையானப் பணம் எவ்வளவு? .....

15) ஒரு குளிர்பான போத்தல் 7 பேரை உபசரிப்பதற்கு போதுமானது. 39 பேரை உபசரிக்க எத்தனை குளிர்பான போத்தல் தேவைப்படும்? .....

16) 1550m நீளமான கயிரொன்று இரு சமதுண்டுகளாக வெட்டபட்ட பின்னர் ஒரு துண்டிலிருந்து 400m துண்டு வெட்டிநீக்கப்பட்டால் எஞ்சும் சிறிய துண்டின் நீளம் யாது? .....

17) எண் கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் வெற்றிடத்தில் முறையே எழுதுக.

1200, 600, 300, ..., ...

18) நகரம் P இலிருந்து வேறு சில நகரங்களுக்குச் செல்வதற்கு வயது வந்தோர் பேருந்துக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய பணம் கீழே தரப்பட்டுள்ளது.

நகரம்	பேரூந்துக் கட்டணம் ரூபாய்	சதம்
Q	**30**	**00**
R	**46**	**00**
S	**28**	**00**
T	**54**	**00**

(ஒரு வயது வந்தவருக்கான கட்டணத்தில் அரைவாசியை ஒரு பிள்ளைக்கான பேருந்துக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்)

அ) நகரம் P இலிருந்து R இற்குச் செல்வதற்கு வயது வந்தோர் ஐவரும் மூன்று பிள்ளைகளும் பேருந்தில் ஏறினர். அவர்கள் அனைவரும் செலுத்த வேண்டிய மொத்த பேருந்துக் கட்டணம் யாது? .....

ஆ) நகரம் P இலிருந்து T இற்குச் செல்வதற்கு வயது வந்தோர் நால்வரும் நான்கு பிள்ளைகளும் பேருந்தில் ஏறினர். அவர்கள் அனைவரும் செலுத்த வேண்டிய மொத்த பேருந்துக் கட்டணம் யாது? .....

இ) வயது வந்தோர் ஐவர் நகரம் Pஇலிருந்து Sஇற்குச் சென்று மீண்டும் நகரம் Pஇற்கு திரும்பி வந்தால் அவர்கள் செலுத்த வேண்டிய மொத்த பேருந்துக் கட்டணம் யாது?

.....

19) புத்தகமொன்றை வாசிப்பதற்கு வியாழக்கிழமை ஆரம்பித்தேன். வியாழக்கிழமை வாசித்த பக்கங்களைவிட 20 பக்கங்கள் அதிகமாக வெள்ளிக்கிழமை வாசித்தேன். நான் இரு நாட்களிலும் புத்தகத்தில் 130 பக்கங்களை வாசித்திருப்பின் வியாழக்கிழமை வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை யாது? .....

20) பயாஸா தன்னிடமுள்ள பணத்தில் அரைவாசியை செலவிட்டு ரூபாய 350.00 பெறுமதியுள்ள 3 புத்தகங்களை வாங்கினால் எனின் அவளிடமிருந்த மொத்த பணம் யாது? .....

21) **பின்வரும் பாடலை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

இரவும் பகலும் எதற்கு ? – மனம்
இன்பம் துன்பம் உணர
மேடு பள்ளம் எதற்கு ? வாழ்வில்
ஏற்றத் தாழ்வு உணர

காயும் கனியும் எதற்கு? சொல்லின்
கசப்பும் இனிப்பும் உணர
வெயிலும் மழையும் எதற்கு? உள்ளக்
கடுமை அன்பு உணர

பூவும் பிஞ்சும் எதற்கு? வாழ்வின்
புதுமை இளமை உணர

1) மனம் என்பதற்கு ஒத்தகருத்து சொல் ஒன்று தருக .....
2) முதுமை என்பதன் எதிர்கருத்துச் சொல்லை எழுதுக. .....
3) பாடலில் உள்ள இணைமொழித் தொடர் ஒன்றை எழுதுக. .....
4) "பூவும்" என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக. .....
5) ஏற்றத்தாழ்வு என்பதனை பிரித்தெழுதுக. .....
6) இன்பம் + துன்பம் என்பதனை சேர்த்தெழுதுக. .....

22) **அடைப்புக்குள் உள்ள சொற்களில் பொருத்தமான சொல்லை தெரிவுசெய்து இடைவெளி நிரப்புக.**

01. முற்றத்து மல்லிகை ..... பரப்பியது (மனம், மணம்)
02. அப்பாவும் நானும் மாலைவேளையில் ..... அருந்துவோம். (தேனீர், தேநீர்)

23) **பின்வரும் தொடர் மொழிக்குரிய ஒரு மொழியை எழுதுக.**

(1) நூலாசிரியர் தனது நூலைப்பற்றி எழுதும் உரை - .....
(2) அறிஞர்கள் வாதிடும் களம் - .....

24) **பின்வரும் வாக்கியத்தை தனி வாக்கியங்களாக எழுதுக.**

நான் நன்றாகப் படித்ததால் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றேன்.

.....

.....

25) **பின்வரும் வாக்கியங்களை இறந்தகால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. நாங்கள் கருத்தரங்கிற்கு செல்வோம்.

.....

2. கீதாவும் மீனாவும் பாடம் படிக்கின்றார்கள்.

.....

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkdu.lk

26) **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. அ.ற்றிணை இறந்தகால ஒருமை வினைச்சொல் : (கதிரை, பாய்ந்தது, சென்றேன்)
2 .உயர்திணை படர்க்கைப் பன்மைப் பெயர்ச்சொல் : (மாணவர்கள், நாங்கள், நீவிர்)

27) **பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.**

1. நாம் எதிர்பார்த்ததை விட கண்காட்சி சிறப்பாக நடந்து முடிந்தது
2. இலங்கையின் தேசிய பறவை எது

28) **பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1) பனங்காய் : ..... 2) கப்பற்கூலி :.....

29) **பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1) ஒன்று + ஊர் : ..... 2) கயிறு + கட்டில் :.....

30) தரப்பட்டுள்ள காட்சிப்படத்தை அவதானித்து மூன்று வாக்கியங்கள் அமைக்குக.



1) .....
.....

2) .....
.....

3) .....
.....

எம்.ஆர்.எம்.ரனீஸ் ஆசிரியரினால் Zoom மூலமாக நடாத்தப்படும் புலமைப்பரிசில் வகுப்பில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள்
071 3320333, 077 7557434 என்ற இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

2021 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான வகுப்புக்கள் (றமழான் காலத்தில் மாத்திரம்)
குழு 01 – சனிக்கிழமை காலை 11.00 – 12.45வரை
குழு 02 – சனிக்கிழமை மாலை 03.30 – 05.15 வரை

2022 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான வகுப்புக்கள் (றமழான் காலத்தில் மாத்திரம்)
ஞாயிற்றுக்கிழமை மாலை 03.30 – 05.00 வரை